## 10 மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# வாய் தொடர்பான இலவச பரிசோதனை முகாம்

சென்னை, ஆக.23–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், டாக்டர் ஸ்மைல்ஸ் டென்டர் சென்டர் உடன் இணைந்து மெட்ரோ ரெயில் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு வாய் தொடர்பான பரிசோதனை முகாமை வருகிற 25–ந்தேதி நடத்துகிறது. இதற்கான முகாம்கள் ஏ.ஜி.–டி.எம்.எஸ்., சைதாப்பேட்டை, ஆலந்தூர், ஈக்காட்டுத்தாங்கல், அசோக்நகர், வடபழனி, திருமங்கலம், ஷெனாய் நகர், நேரு பூங்கா மற்றும் சென்டிரல் ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெறும்.

ஈறுகளில் ஏற்பட்டுள்ள வீக்கம் தொடர்பான பரிசோதனை, பல் சிதைவு, உமிழ்நீர் சோதனை, பல் துலக்குதல் தொடர்பான ஆலோசனைகள் உள்பட பல்வேறு அம்சங்கள் இந்த இலவச மருத்துவ முகாமில் உள்ளடங்கியிருக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.